சுருக்கம்

பாசனம் – மேட்டூர் அணை 2007–2008 ஆம் ஆண்டு பாசன ஆண்டிற்காக மேட்டூர் அணையிலிருந்து 18.7.2007 முதல் தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(என்1)துறை

அரசாணை நிலை எண்:214 நாள்:17.7.2007

படிக்க:

1. திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர், கடிதம் எண்.139/ உதவி பொறியாளர் 2/கோப்பு 38 நாள் 11.7.2007.
2. திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர், கடித எண்.405//உ.பொ.2/கோ.38/2007/ நாள்.17.7.2007

-----

**ஆணை**

மேலே 2ல் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, திருச்சி மண்டலம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் 2007–08ஆம் ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து 18.7.2007 அன்று மாலை 6.00 மணிக்கு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிடுகிறது.

2. இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையினை 18.7.2007 தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடுமாறு பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை அவர்கள் பணிக்கப்படுகிறார்.

3. இவ்வாணையுடன், இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் உடனடியாக வெளியிடுமாறு சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

பெறுதல்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு(ம) தலைமைப் பொறியாளர்(பொது)
பொதுப்பணித்துறை, சென்னை–5(இ)

தலைமைப் பொறியாளர்
நீர்வள ஆதார அமைப்பு
பொதுப்பணித் துறை
திருச்சி மண்டலம், திருச்சி–20(இ)
பணி மேலாளர்,அரசு மைய அச்சகம்
சென்னை–79(இ)
மாவட்ட ஆட்சியர், சேலம்
மாவட்ட ஆட்சியர், நாமக்கல்
மாவட்ட ஆட்சியர், கரூர்
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்
மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்
மாவட்ட ஆட்சியர், திருவாரூர்
மாவட்ட ஆட்சியர், கடலூர்
நில நிர்வாக ஆணையர்
சென்னை (இ)
இயக்குநர்,வேளாண்மைத்துறை
சென்னை–5
முதலமைச்சரின் தனிச் செயலாளர்
சென்னை–9(இ)
சிறப்பு நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (பொதுப்பணி மற்றும் சட்டம்)
சென்னை–9.
அனைத்து பாசனப் பிரிவுகள்,
பொதுப்பணித்துறை, சென்னை–9.
தலைவர்,காவிரி தொழில்நுட்பக் குழு
சென்னை–8.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.

## அறிவிக்கை

**18.07.2007** முதல் காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து **21.07.2007** அன்று பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் தண்ணீர் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது.

**2.** விவசாயப் பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி நீர்பங்கீட்டில் பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் ஒத்துழைத்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேவை ஏற்பட்டால் பாசனத்திற்கு முறை வைத்து தண்ணீர் விடப்படும்.

எஸ்.ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்.